தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 13/பேரூ/2022

நாள் 28.03.2022

திரு. S. கார்த்திகேயன்,
சேத்தூர், விருதுநகர் மாவட்டம் ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
சா.கொடிகுளம் பேரூராட்சி, விருதுநகர் மாவட்டம் ... எதிர்மனுதாரர்

விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் வட்டம், 42 பிள்ளைமார் தென்வடல் தெரு, சேத்தூர் என்ற முகவரியைச் சேர்ந்த திரு. S. கார்த்திகேயன் என்பவரின் 28.01.2022 முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 31.01.2022ல் பெறப்பட்டு, 13/2022என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் வட்டம், 42 பிள்ளைமார் தென்வடல் தெரு, சேத்தூர் என்ற முகவரியைச் சேர்ந்த திரு. S. கார்த்திகேயன் என்பவர் அளித்துள்ள புகார் மனுவில் விருதுநகர் மாவட்டம், சா.கொடிக்குளம் பேரூராட்சிக்கு கடந்த சில ஆண்டுகளாக நிரந்தர செயல் அலுவலர் இல்லாததால், கூடுதல் பொறுப்பாகவே செயல் அலுவலர்கள் பணிபுரிந்து வந்தனர் என்றும், அப்போதிலிருந்தே பேரூராட்சியில் துப்புரவு மேற்பார்வையாளர் திரு. பா. மகேஷ், பதிவறை எழுத்தர் திரு. பா. சண்முகநாதன் மற்றும் கணினி இயக்குபவராக ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் திருமதி. ச. கனகலட்சுமி ஆகிய மூவரும் விதிமுறைகளை கடைபிடிக்காமல் வேண்டிய நபர்களுக்கு தன்னிச்சையாக பணம் பெற்றுக்கொண்டு, முறையற்ற சொத்துவரி ரசீதுகள் மற்றும் சட்ட விரோதமாக குடிநீர் இணைப்புகள், பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழ்கள் வழங்கியதில் செயல் அலுவலர்

போலி கையெழுத்து மோசடி, தனிநபர் கழிப்பிடம் கட்டும் திட்டத்தில் முறைகேடு மற்றும் வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி முறைகேடு செய்துள்ளது தெரியவருகிறது என்று குறிப்பிட்டுள்ளார். இது சம்மந்தமாக பேரூராட்சிகளின் ஆணையர், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர், ஊழல் தடுப்பு மற்றும் காண்காணிப்புத் துறைக்கு பல்வேறு புகார்கள் தெரிவித்தும் சம்மந்தப்பட்ட துறை அதிகாரிகள் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்காத காரணத்தினால் கீழ்க்கண்ட மோசடி மற்றும் முறைகேடுகள் குறித்து முறைமன்ற நடுவத்தின் முன் புகார் மனு சமர்ப்பிப்பதாக குறிப்பிட்டுள்ளார்:-

1. குடிநீர் இணைப்பு முறைகேடு
2. சொத்துவரி ரசீது முறைகேடு
3. தனிநபர் கழிப்பிடம் கட்டும் திட்டத்தில் முறைகேடு
4. பிறப்பு இறப்பு சான்றிதழ் வழங்கியதில் முறைகேடு (கையெழுத்து மோசடி)
5. பரப்புரையாளர்களின் வருகைப்பதிவேடு முறைகேடு
6. ஒப்பந்தப்புள்ளி நியமன முறைகேடு
7. அலுவலக உதவியாளர் பணிநியமன முறைகேடு
8. போலியான செலவினங்கள் (வவுச்சர்கள்), அபிரிமிதமான செலவினங்கள், தனிநபர் மற்றும் தனியார் நிறுவனங்களிடம் பிடித்தம் செய்யவேண்டிய வரியினங்கள் அரசு கணக்கில் செலுத்தாததில் முறைகேடு
9. துப்புரவு பணியாளர் பணிநியமன முறைகேடு

பல்வேறு மோசடிகளில் ஈடுபட்டு பேரூராட்சிக்கு வருமான இழப்பினை ஏற்படுத்திவரும் செயல் அலுவலர், துப்புரவு மேற்பார்வையாளர் திரு. பா. மகேஷ், பதிவறை எழுத்தர் திரு. பா. சண்முகநாதன் மற்றும் கணினி இயக்குபவர் திருமதி. ச. கனகலடசுமி ஆகியோர் மீது துறை ரீதியாகவும், நிதி முறைகேடுகள் செய்த வகையில் பேரூராட்சிக்கு ஏற்படுத்திய நிதியிழப்பினை மேற்படி நபர்களிடமிருந்து வசூல் செய்து பேரூராட்சி கணக்கில் சேர்த்திடவும், மேலும் துப்புரவு மேற்பார்வையாளர் திரு. பா. மகேஷ், பதிவறை எழுத்தர் திரு. பா. சண்முகநாதன் இருவரையும் சொந்த மாவட்டத்திலிருந்து வேறு மாவட்டத்திற்கு பணியிடமாறுதல் செய்தும், கணினி இயக்குபவர் திருமதி. ச. கனகலட்சுமி என்பவரின் ஒப்பந்த பணிநியமனத்தை ரத்து செய்து அவரை பணியிலிருந்து வெளியேற்ற உத்தரவிடுமாறும் கோரி இம்முறைமன்ற நடுவத்தில் புகார் மனு அளித்துள்ளார். மனுதாரர் தனது புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள தலைப்புவாரியான புகார்கள் குறித்து பல்வேறு ஆவண நகல்களை தனது புகார்களுக்கான ஆதார ஆவணங்களாக சமர்ப்பித்துள்ளார். மேலும், இம்முறைமன்ற நடுவத்திற்கு அளித்துள்ள புகார் மனுவின் நகலினை பேரூராட்சிகளின் ஆணையாளர், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், மதுரை மண்டலம் மற்றும் காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, விருதுநகர் மாவட்டம் ஆகியோருக்கும் மனுதாரர் நகலிட்டு சமர்ப்பித்துள்ளார்.

2. சா.கொடிக்குளம் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் முறையீட்டு மனுதாரர் ஆகியோர் 01.03.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவ 22.02.2022 நாளிட்ட அழைப்பாணைகள் ஒப்புகையுடன் கூடிய பதிவு அஞ்சல் மூலமாக அனுப்பப்பட்டன. முறையீட்டு மனுதாரர் மற்றும் சா.கொடிக்குளம் பேரூராட்சி செயல் அலுவலர் 1.3.2022 அன்று திருநெல்வேலி முகாமில் நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளனர்:-

3. மனுதாரர் திரு. எஸ். கார்த்திகேயன் அளித்துள்ள தமது வாக்குமூலத்தில் "விருதுநகர் மாவட்டம், கொடிக்குளம் பேரூராட்சியில் கீழ்க்கண்ட முறைகேடுகள் நடைபெற்றுவருகின்றன:-

(1) குடிநீர் இணைப்புகள் சட்டவிரோதமாக வழங்கப்படுகின்றன (2) தனிநபர் கழிப்பிடம் கட்டும் திட்டத்தில் முறைகேடு (3) சொத்துவரி விதிப்பில் வார்டுகளை மாற்றி குளறுபடி (4) பிறப்பு இறப்புச் சான்றிதழ்களில் செயல் அலுவலரின் கையொப்பமில்லாமல் வழங்கப்பட்டுள்ளன (5) மோட்டார் வாங்கியதில் முறைகேடு (6) நாளிதழ்களில் விளம்பரம் கொடுக்காமல், பணியாளர்களை தேர்தெடுத்தது (7) பேரூராட்சியில் பணியாற்றும் பணியாளர்களுக்கு பணிக்கு வராத நாட்களுக்கும் சம்பளம் (8) ஒப்பந்தபுள்ளிகள் கோருவதில் முறைகேடு. மேற்கண்ட முறைகேடுகளுக்கு காரணமான அலுவலர்கள் மீது தக்க நடவடிக்கை எடுத்திடவும், பேரூராட்சிக்கு ஏற்படும் நிதியிழப்பை தவிர்த்திடும் பொருட்டு உரிய நடவடிக்கை எடுக்கும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். இந்நேர்வு தொடர்பான எனது 28.1.2022 நாளிட்ட மனுவினையே எனது மேல்விளக்கமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என்று தெரிவித்துள்ளார்.

4. சா.கொடிக்குளம் பேரூராட்சி செயல் அலுவலர் 1.3.2022 அன்று திருநெல்வேலி முகாமில் நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள தமது வாக்குமூலத்தில் "கொடிக்குளம் பேரூராட்சியில் குடிநீர் இணைப்பு, சொத்துவரி விதிப்பு, கழிப்பிடம், பிறப்பு இறப்புச் சான்றிதழ் வழங்கியது குறித்த புகார், ஒப்பந்தப்புள்ளி, பணியாளர் நியமனம் மற்றும் பணியாளர் வருகை ஆகிய புகார்கள் குறித்து மனுதாரர் கொடுத்துள்ள புகார்களின் மீது எனது 28.2.2022 நாளிட்ட கடிதத்தினையே எனது வாக்குமூலமாக இம்முறைமன்றத்தில் பதிவு செய்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

5. சா.கொடிக்குளம் பேரூராட்சி செயல் அலுவலர் மனுதாரரின் புகார் மனு குறித்து 1.3.2022 அன்றைய நேரடி விசாரணையின்போது அளித்துள்ள 28.2.2022 நாளிட்ட விளக்க அறிக்கையில் மனுதாரரால் பேரூராட்சி நிர்வாகத்தின் மீது அளிக்கப்பட்டுள்ள முறைகேடுகளுக்கான விளக்கத்தினை இனங்கள் வாரியாக கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-

(1). குடிநீர் இணைப்பு முறைகேடு: சா.கொடிக்குளம் பேரூராட்சியில் குடிநீர் இணைப்பு வழங்குவது தொடர்பாக விளம்பரம் செய்யப்படும். அதன் அடிப்படையில் குடிநீர் இணைப்பு வழங்கவேண்டி பேரூராட்சிக்கு சொத்துவரி இரசீதுடன் உரிய படிவத்தில் விண்ணப்பம்

செய்வார்கள். அவ்வாறு வரப்பெற்ற விண்ணப்பங்களை அலுவலக பணியாளர்களுடன் நேரில் சென்று ஆய்வு செய்து தகுதி இருப்பதை உறுதிசெய்த பின்பு, விண்ணப்ப பதிவுக் கட்டணம் மற்றும் உரிய டெபாசிட் தொகை பேரூராட்சியில் செலுத்தியவுடன் உரிய இரசீதுகள் வழங்கப்படும். பணி மேற்பார்வையாளரால் மெயின் பைப் லைனிலிருந்து விண்ணப்பம் செய்த உரிமையாளர் வீட்டு தூரத்தை அளவீடு செய்து பேரூராட்சி செயல் அலுவலரிடம் தெரிவிப்பார். அதன் பின்பு அரசாணை எண்.97 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 12.07.2007ன்படி குடிநீர் இணைப்பு சென்டேஜ் கட்டணம் நிர்ணயம் செய்து, அதன் விவரம் சம்மந்தப்பட்ட வீட்டின் உரிமையாளருக்கு அறிவிப்பு கொடுக்கப்படும். அதன்பின் மேற்படி கட்டணத்தை யார் முதலில் செலுத்துகிறார்களோ அவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் இணைப்பு வழங்கப்படும். குடிநீர் இணைப்பு வழங்கப்படாதது குறித்து பொது மக்களிடமிருந்து பேரூராட்சிக்கோ அல்லது உயர் அலுவலருக்கோ எந்தவித புகார் கடிதமும் வரப்பெறவில்லை. குடிநீர் இணைப்புக்காக அனைவரிடமிருந்தும் பதிவுக் கட்டணமாக ரூ.100/– வசூலிக்கப்பட்டது. ரூ.500/– வசூலிக்க வேண்டுமென மனுதாரர் தெரிவித்திருப்பதற்கு அரசாணை ஏதும் இல்லை. சென்டேஜ் கட்டணமும் அரசாணையின் அடிப்படையில்தான் வசூலிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் குறிப்பிட்டுள்ளதுபோல் மதிப்பீட்டில் 10 சதவீதம் வசூல் செய்யவேண்டுமென 2007–க்கு பின்பு அரசாணை ஏதுமில்லை. அலுவலக பணியாளர்கள் யாரும் கையூட்டு பணம் ஏதும் வசூலிப்பதில்லை. இது முற்றிலும் பொய்யான புகார் ஆகும். மனுதாரர் குறிப்பிட்டுள்ள இணைப்பு எண்.401 ச. கனகலட்சுமி தகப்பனார் சடாச்சரம் ஆசாரி இறந்துவிட்டதால் அன்னாரின் பெயரில் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. இதில் தவறு ஏதும் இல்லை. குடிநீர் இணைப்பு எண்.350 கொண்ட வீடு சுந்தரமூர்த்தி என்பவரது பெயரில் சொத்துவரி இருந்ததால் அன்னாரின் பெயரில் இணைப்பு வழங்கப்பட்டது. மேற்படியாரிடமிருந்து யாதவர் டிரஸ்ட் கிரையம் பெற்றுள்ளதால், இதை அவர்கள் பயன்படுத்தி வருகிறார்கள். கதவு எண் இல்லாத வீட்டிற்கு குடிநீர் இணைப்பு ஏதும் வழங்கப்படவில்லை. வெ. இராமச்சந்திரன் என்பவர் குடிநீர் இணைப்பு டேவணித் தொகைக்கான வங்கி வரைவோலை ஏதும் மனுதாரர் குறிப்பிட்ட தேதியில் பேரூராட்சியில் வரப்படவில்லை. இது சம்மந்தமாக சம்மந்தப்பட்ட நபருக்கு கடிதம் வாயிலாக தெரிவித்த பின்பு 09.01.2020ல் கட்டணங்கள் பெறப்பட்டு, அன்னாருக்கு இணைப்பு வழங்கப்பட்டது. இதில் எவ்வித முறைகேடும் நிகழவில்லை. எனவே, குடிநீர் தொடர்பாக மனுதாரரால் கூறப்பட்டுள்ள புகார்கள் முற்றிலும் மறுக்கப்படுகிறது.

(2). சொத்துவரி முறைகேடு: சொத்துவரி விதிப்பு எண்கள் முறைகேடாக பெயர் மாற்றப்படவில்லை. பத்து ஆண்டுகளுக்கொருமுறை வரிச்சீராய்வின்படி வரிவிதிப்பு எண்கள் இடம் மாறும். மேலும் ஒவ்வொரு வருடத்திலும் புதிய வரிவிதிப்பு எண்கள் சேரும்போது அந்த வருடத்திற்குரிய வரிவிதிப்பு எண்கள் அந்தந்த வார்டு, தெரு வாரியாக இடப்பட்டு மறுவருடத்தில் அந்தந்த வார்டு தெருவுக்கு கொண்டுசெல்லும்போது வரிவிதிப்பு எண்கள் மாறும். அதனை வைத்து முறையீட்டு மனுதாரர் வரிவிதிப்பு எண்கள் பெயர்களை மாற்றியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். எனவே, இதில் எவ்வித முறைகேடுகளும் நிகழவில்லை என உறுதியளிக்கப்படுகிறது.

(3). தனிநபர் கழிப்பிடம்: தனிநபர் கழிப்பிடம் கட்டுவது தொடர்பாக பொதுமக்கள் பேரூராட்சிக்கு விண்ணப்பம் செய்வார்கள். செயல் அலுவலர் நேரில் சென்று ஆய்வு செய்து கழிப்பிடம் கட்ட போதுமான இடவசதி இருப்பின் அவர்களுக்கு பொறியாளரின் ஆலோசனை பெற்று வேலை உத்தரவு வழங்கப்படும். கழிப்பிடம் கட்டி முடிக்கப்பட்டு, கட்டப்பட்ட சுவற்றின் முன்புறம் திட்டத்தின் பெயர், பயனாளியின் பெயர், மதிப்பீடு விவரத்தினை பெயின்டால் எழுதி, அதனை பயனாளிகள் புகைப்படம் எடுத்து பேரூராட்சி அலுவலகத்தில் ஒப்படைப்பார்கள். அப்புகைப்படத்தின் அடிப்படையில் பொறியாளர் நேரில் சென்று பார்வையிட்டு, பட்டியல் தயார் செய்து கையொப்பத்துடன் சான்று வழங்குவார். அதன் அடிப்படையில், பயனாளிகளுக்கு தொகை வழங்கப்பட்டுள்ளது. இதில் முறைகேடுகள் ஏதும் இல்லை. எனவே கழிப்பிடம் குறித்து மனுதாரரால் அளிக்கப்பட்டுள்ள புகார்கள் அனைத்தும் மறுக்கப்படுகிறது.

(4). பிறப்பு இறப்புச் சான்று வழங்கியதில் முறைகேடு: பொது மக்கள் காலம் கடந்த பிறப்பு மற்றும் இறப்புகளை பதிவுசெய்ய சிவகாசி சார் ஆட்சியருக்கு உரிய ஆவணங்களுடன் விண்ணப்பம் செய்வார்கள். அவ்விண்ணப்பம் சார் ஆட்சியர் அலுவலகத்திலிருந்து பிறப்பு இறப்பு பதிவு செய்வதில் ஆட்சேபனை ஏதும் இருக்கிறதா (NOC) என்று பேரூராட்சி செயல் அலுவலரிடம் கேட்பார்கள். அக்கடிதத்தினைத்தான் மனுதாரர் குறிப்பிட்டுள்ளார். ஆட்சேபனை ஏதுமில்லை என பேரூராட்சியிலிருந்து சார் ஆட்சியருக்கு கடிதம் அனுப்பப்பட்டு, சார் ஆட்சியர் அவர்கள் பதிவு செய்ய உத்தரவு வழங்கப்படும். அதன் அடிப்படையில், பேரூராட்சிகள் பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்து சான்று வழங்கப்படும். எனவே, மனுதாரரால் கூறப்பட்டுள்ள புகார் முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது. மனுதாரர் குறிப்பிட்டுள்ள பிறப்பு இறப்பு பதிவேட்டின் அடிக்கட்டைகள் வத்திராயிருப்பு சார் பதிவாளர் அலுவலகத்தில் ஏற்கனவே ஒப்படைக்கப்பபடட்டுள்ளன. தற்போது அலுவலகத்தில் இல்லை.

(5). பரப்புரையாளர்களின் வருகைப் பதிவேடு: பரப்புரையாளர் ஆர். பிரபாராணி என்பவர் தினசரி காலை 10 மணிக்கு தனது இருசக்கர வாகனம் மூலம் வருகை தந்து தனது பணிகளை செய்து வந்துள்ளார். அதன் அடிப்படையிலேதான் வருகை பதிவு செய்யப்பட்டுள்ளது. அவரது திருமண நாளன்று அவரது உறவினரால் இப்பணி மேற்கொள்ளப்பட்டதால் 30.08.2018 அன்று அவருக்கு விடுப்பாக பதிவு செய்யப்படவில்லை. மேலும், திருமணத்திற்கு பின்னர் கூமாப்பட்டியில் அவர் வாடகை வீடு பார்த்து தங்கியிருந்த நிலையில், அவரது உறவினர் மூலம் பணிகள் செய்யப்பட்டதால், அன்னாரின் பெயரில் வருகைப் பதிவு செய்யப்பட்டது. குழந்தை பிறந்த மூன்று நாட்கள் மட்டுமே விடுப்பாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இப்பணியாளருக்கான ஊதியம் பேரூராட்சியிலிருந்து வழங்கப்படவில்லை. இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி மேற்கொண்ட நிறுவனம்தான் பேரூராட்சியிடம் வருகை விபரத்தை பெற்றுக்கொண்டு ஊதியம் வழங்கியுள்ளது. எனவே, வருகைப்பதிவேடு குறித்து மனுதாரர் அளித்துள்ள புகார்கள் முற்றிலும் மறுக்கப்படுகிறது.

(6). ஒப்பந்தப்புள்ளி முறைகேடு: வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி விபரத்தை மக்கள் தொடர்பு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், விருதுநகர் மூலமாகத்தான் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. வருடாந்திர ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை

26.7.2019ஆம் தேதி வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நோட்டீசில் தெரிவிக்கப்பட்டுள்ளதைத் தவிர, அந்த நேரத்தில் முடிவுகள் தெரிவிக்கப்படுமென தெரிவிக்கப்படவில்லை. ஒப்பந்தப் புள்ளிகள் முடிவு செய்யப்பட்டு, அதற்கு பேரூராட்சி தனி அலுவலரின் கூட்டத்தில் அங்கீகாரம் பெற்ற பின்னர்தான் முடிவு தெரிவிக்கப்படும்.

2019–2020ஆம் ஆண்டுக்கு கணினியை இயக்குவதற்கான ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. வைரமுத்து என்பவர் ரூ.3,000/–க்கு ஒப்பந்தப்புள்ளி அளித்ததன் அடிப்படையில் அன்னாருக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டது. ஆனால் அவர் பணிக்கு வரவில்லை என எழுத்துபூர்வமாக கடிதம் அளித்ததால், விதிகளை கடைபிடித்து மறு டெண்டர் கோரினால் காலதாமதம் ஏற்படுமென்பதால், ச. கனகலட்சுமி என்பவர் 2018–2019ஆம் ஆண்டைய ஒப்பந்த தொகைக்கு பணிசெய்ய சம்மதித்ததாலும், ஏற்கனவே இப்பணியில் இவர் பத்தாண்டுகள் அனுபவம் பெற்றிருந்ததாலும், பணியின் அவசியத்தை முன்னிட்டு ச. கனகலட்சுமி அனுமதிக்கப்பட்டதைத் தவிர, மனுதாரர் கூறியுள்ள குற்றச்சாட்டுகள் முற்றிலும் உண்மைக்கு புறம்பானதாகும்.

2020–2021 மற்றும் 2022ஆம் ஆண்டுக்கான ஒப்பந்தப்புள்ளிகளில் அனைத்து விதிகளும் முறையாக கடைபிடிக்கப்பட்டுள்ளன. ஒப்பந்தப்புள்ளிகளை அங்கீகாரம் செய்யும் அதிகாரம் பேரூராட்சியின் தனி அலுவலருக்கு மட்டுமே உள்ளது. அதனடிப்படையில் தனி அலுவலரின் ஒப்புதலை பெற்ற பின்பு கணினிக்கு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியரால் அனுமதிக்கப்பட்ட தொகைக்கு யாரும் முன்வராத காரணத்தினாலும், பேரூராட்சியில் சொத்துவரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம் மற்றும் வரியில்லா இனங்கள் கட்டணங்கள் அனைத்தும் வசூலிப்பதாலும், செலவினங்கள் திட்டப் பணிகளுக்கான கடிதங்கள் அனைத்தும் கணினி மூலமாக மேற்கொள்வதால் பணிச்சுமை காரணமாகவே மாவட்ட ஆட்சியர் அனுமதித்த தொகையைவிட (rates) நடைமுறையிலுள்ள விலைவாசியைக் கருத்திற்கொண்டும் கூடுதல் தொகைக்கு தனி அலுவலரால் அங்கீகரிக்கப்பட்டு ஊதியம் வழங்கப்பட்டுள்ளது. இதில் எவ்வித முறைகேடும் நடைபெறவில்லை. எனவே கணினி இயக்குதல் தொடர்பாக மனுதாரரால் கூறப்பட்டுள்ள நபர்கள் கையூட்டு பெற்றதாக கூறியுள்ளது முற்றிலுமாக மறுக்கப்படுகிறது.

உழுவை ஓட்டுநர் (Tractor Driver) தொடர்பாக 2018–2019ஆம் ஆண்டுக்கு வரப்பெற்ற ஒப்பந்தத்தில் மாதம் ஒன்றுக்கு ரூ.600/– என திரு. அ. பாண்டி, மேலரதவீதி, கூமாப்பட்டி என்பவர் குறைவாக கொடுத்திருந்தபோதிலும், இவரிடம் கனரக வாகனம் இயக்குவதற்கான உரிமம் இல்லை. மா. கார்த்திகேயன் என்பவர் ரூ.15,000/– என அதிக தொகை குறிப்பிட்டதால் டெண்டர் ரத்து செய்யப்பட்டு, மீண்டும் 30.5.2018ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் (1) முகமது சுல்தான் ரூ.4500/– (2) அ. அன்னபாண்டி ரூ.3,900/– (3) மா. கார்த்திகேயன் ரூ.1,500/– மற்றும் (4) சி. வனராஜ் ரூ.310/– என வரப்பெற்றதன் அடிப்படையில், குறைவான தொகை கோரிய சி. வனராஜ் பணிக்கு வரவில்லையென எழுத்துபூர்வமாக தெரிவித்ததால், அதற்கடுத்த குறைவான தொகை கோரிய திரு. மா. கார்த்திகேயன் என்பவரை அனுமதித்து பணிசெய்ய உத்தரவு வழங்கப்பட்டது.

இவருக்கு மாதம் ரூ.9000/– வீதம் ஊதியம் வழங்கப்படவில்லை. நிர்வாக பணி நிமித்தம் காரணமாகத்தான் தீர்மானம் வாங்க இயலவில்லை. ஆனால் இச்செலவினங்களுக்கு தனி தனி அலுவலரால் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. எனவே உழுவை ஓட்டுநர் தொடர்பாக மனுதாரரால் தெரிவிக்கப்பட்டுள்ள புகார்கள் முற்றிலுமாக மறுக்கப்படுகின்றன.

(7). அலுவலக உதவியாளர் பணி நியமனம்: அலுவலக உதவியாளர் பணியிடத்திற்கு 24.10.2019 அன்று விளம்பரம் செய்யப்பட்டதன் அடிப்படையில் 24 விண்ணப்பங்கள் வரப்பெற்றும், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம் வரப்பெற்ற பட்டியலையும் சேர்த்து மொத்தம் 27 நபர்களுக்கு 6.12.2019 அன்று நேர்முக தேர்வு நடைபெற்றது. இதில் சுரேஷ்குமார் என்பவர் மட்டும் தகுதியானவர் என தெரிவு செய்யப்பட்டு நியமன குழுவின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. பேரூராட்சி மன்றம் தலைவர், உறுப்பினர்கள் தேர்வு செய்த காலத்தில் உறுப்பினர்களை நியமன குழு தேர்வு உறுப்பினர்களாக செய்யப்படும். அதன் பின்பு நியமனக்குழு உருவாக்கப்படும். இதில் பேரூராட்சி மன்றத் தலைவர் குழுவின் தலைவராகவும், பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் மன்றத்தால் தேர்வு செய்யப்பட்ட உறுப்பினரும் இக்குழுவில் அடங்குவார்கள். ஆனால் 25.10.2016–க்கு பின்பு மன்றம் இல்லாத காரணத்தினால் தனி அலுவலரும் மற்றும் பேரூராட்சி செயல் அலுவலர் ஆகிய இருவர் மட்டுமே நியமனக் குழுவாக கருதப்பட்டனர். எனவே, அலுவலக உதவியாளர் நியமனத்தில் அனைத்து விதிகளும் முறையாக கடைபிடிக்கப்பட்டுள்ளது. மனுதாரரால் குறிப்பிட்டுள்ள முறைகேடு முற்றிலும் மறுக்கப்படுகிறது.

(8). செலவினங்கள் – மின் மோட்டார்: மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ள வரிசை எண். 1 முதல் 52 முடிய உள்ள செலவினங்கள் அனைத்தும் மின்மோட்டார் பழுது, வெள்ளை அடித்தல் மற்றும் குடிநீர் பணி பழுதுநீக்கம் போன்றவையாகும். மின் மோட்டார் பழுது விபரம் பற்றி பொதுமக்கள் தொலைபேசி மூலமாக புகார் அளிப்பார்கள். பின்னர், பேரூராட்சி பணியாளர்களுடன் நேரில் சென்று பார்வையிட்டு, பழுது விபரத்தை அளித்து சம்பந்தப்பட்ட ஒப்பந்தப்புள்ளி அனுமதிபெற்ற நபரிடம் அறிக்கை பெறப்பட்டு, மின்மோட்டார் பழுதுநீக்கம் செய்யப்பட்டுவருகிறது. மின் மோட்டார் பொருத்தப்பட்டுள்ள விசையிறைப்பான்களில் மின்மோட்டார் காயில் புஷ் சாப்ட், பம்ப், கிட்டி, ரிலே, பேனல் MCB Tripper சார்ட் புஷ் ஆகிய பழுதினங்கள் பழுது ஏற்படுவதால் கூடுதல் செலவினங்கள் ஆகிறது. ஆனால் மனுதாரர் புதிய மின்மோட்டார் கிரையம் மட்டுமே ரூ.8,500/– என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், செலவினங்களில் மேலே குறிப்பிட்ட இனங்களின் அனைத்தும் சேர்த்து செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டது. எனவே கூடுதல் செலவினங்கள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை. மின் மோட்டார் பழுது தொடர்பாக சம்பந்தப்பட்ட பதிவேடுகளில் பதிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், செலவினங்களுக்கு தனி அலுவலரது அங்கீகாரமும் பெறப்பட்டுள்ளது.

(i) குடிநீர் பைப்லைன்: சா.கொடிக்குளம் பேரூராட்சியில் மொத்தம் 15 வார்டுகள், 32 தெருக்களில் 9 மின் மோட்டார்கள், 16 கி.மீ பம்பிங் லைன், 21 கி.மீ பகிர்மான குழாய் அமைந்துள்ளன. இவை அனைத்தையும் பராமரிப்பு செய்ய ஏற்பட்ட செலவினங்கள் மிகக்

குறைவானதாகும். இத்தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் அனைத்தும் விதிமுறைகளுக்குள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதில் கூடுதல் செலவினம் ஏதுமில்லை.

(ii) தெருவிளக்கு: சா.கொடிக்குளம் பேரூராட்சியில் மொத்தம் 410 தெருவிளக்குகள் உள்ளன. அதில் 40 w Tube Lights 356 உள்ளன. தெருவிளக்கு உபகரணங்கள் பேரூராட்சியால் அனுமதிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி நிறுவனத்திடமிருந்து வாங்கப்பட்டுள்ளன. மேற்படி நிறுவனம் உபகரணங்களை சப்ளை செய்ய காலதாமதம் செய்யும்போது, இதர நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி பெறப்பட்டு, குறைந்த விலைப்புள்ளி அளிப்பவரை அங்கீகரித்து அதனடிப்படையில் அந்நிறுவனங்களிடமிருந்து உபகரணங்கள் வாங்கப்பட்டுள்ளன. வாங்கப்பட்ட உபகரணங்கள் அனைத்தும் இருப்புப் பதிவேட்டில் பதிவு செய்தும், அதனை மின் கம்பங்களில் பொருத்திய விபரத்தையும் பதிவேடுகளில் பதிந்து பராமரிக்கப்பட்டுள்ளன. மின் அழுத்தத்தின் காரணமாகவும், மழைக்காலங்களில் இடி மின்னல் காரணமாகவும் உபகரணங்களில் பழுது ஏற்படுவதால் கூடுதலாக வாங்கும் நிலை ஏற்படுகிறது. இச்செலவினங்களுக்கு பேரூராட்சியின் தனி அலுவலரின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. இதில் எவ்வித முறைகேடுகளும் நிகழவில்லை. மேலும் பேரூராட்சிக்கு நிதியிழப்புமில்லை.

(iii) குடிநீர் உபகரணங்கள்: இத்தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் அனைத்தும் விதிமுறைகளுக்குட்பட்டு, பொதுமக்களின் அத்தியாவசியத்தை முன்னிட்டு அவ்வப்போது தேவைக்கேற்ப உபகரணங்கள்/குடிநீர் பொருட்கள் வாங்கி பயன்படுத்தப்பட்டது. இதில் எவ்வித முறைகேடுகளோ அல்லது நிதியிழப்போ இல்லை. செலவினங்களுக்கு பேரூராட்சி தனி அலுவலரின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

(iv) ஜே.சி.பி செலவினங்கள்: பேரூராட்சி பகுதியில் நடைபெறும் திருவிழாக்களை முன்னிட்டும், பொது சுகாதாரம் மற்றும் மழைக்காலங்களில் ஓடைகளில் உள்ள பகுதிகளை ஜே.சி.பி மூலம் சுத்தம் செய்யப்படும். இவ்வேலைகளை மேற்கொள்ள விலைப்புள்ளிகள் பெற்று குறைந்த விலைப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டு வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், செலவினத்திற்கு அனைத்து விதிமுறைகளும் கடைபிடிக்கப்பட்டுள்ளதோடு, செலவினங்களுக்கு தனி அலுவலரின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

(v) மரம் நடுதல், மழைநீர் தொட்டி: இவ்விரு திட்டங்களும் அரசின் முக்கிய திட்டங்களாகும். இச்செலவினங்களுக்கும் அனைத்து விதிமுறைகளும் கடைபிடிக்கப்பட்டுள்ளன. எனவே, மனுதாரரால் கூறப்பட்டுள்ள செலவினங்கள் தொடர்பாக புகார்கள் அனைத்தும் முற்றிலும் மறுக்கப்படுகின்றன.

**(9)** துப்புரவு பணி நியமனம்: சா.கொடிக்குளம் பேரூராட்சியில் 7.9.2007 தேதியன்று சுகாதார பணியாளர் நியமனம் செய்வதற்கு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் பட்டியல் கோரப்பட்டு, நேர்முக தேர்வுக்கான அறிவிப்பு அனுப்பி, நேர்காணல் நடத்தப்பட்டு, தகுதிவாய்ந்த நபராக திரு. பா. மகேஸ் என்பவரை செயல் அலுவலர், நியமனக் குழு உறுப்பினர் மற்றும் தலைவர் ஆகியோர் தேர்வு செய்து, நியமன குழு கூட்டத்தில் அங்கீகாரம்

பெறப்பட்டுள்ளது. இந்நியமனத்தில் அனைத்து விதிகளும் கடைபிடிக்கப்பட்டுள்ளன. எவ்வித முறைகேடுகளும் இதில் நடைபெறவில்லை.

பேரூராட்சியில் பணிபுரியும் சுகாதார பணியாளர்களில் திரு. பா. மகேஸ் என்பவர் மட்டும் சுகாதார மேற்பார்வையாளர் பதவிக்கு தகுதியுடையவர் என்பதால் இப்பணிக்கு அவர் அமர்த்தப்பட்டார். பேரூராட்சியில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. வத்ராப் பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிந்து ஓய்வு பெற்ற செயல் அலுவலர் திரு. ந. ராஜேந்திரன் சா.கொடிக்குளம் பேரூராட்சிக்கு வருகைதந்த நாளன்று அவரது உறவினர் வீட்டிற்கு சொத்துவரி செலுத்துவது தொடர்பாகவும், குடிநீர் குழாய் இணைப்பு பெறுவதற்கும் விவரம் கோரியே பேரூராட்சிக்கு வருகை தந்தாரே தவிர பொய்யான ஆவணங்களை தயாரிப்பதற்கு வருகை புரிந்ததாக கூறுவது முற்றிலும் உண்மைக்கு புறம்பானதாகும்.

6. மனுதாரரின் புகார் மனு மற்றும் மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள், அவரது வாக்குமூலம், சா.கொடிக்குளம் பேரூராட்சி செயல் அலுவலரது வாக்குமூலம் மற்றும் வாக்குமூலத்துடன் அளிக்கப்பட்ட 28.2.2022 நாளிட்ட விளக்க அறிக்கை ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

➢ மனுதாரால் அளிக்கப்பட்டுள்ள விரிவான புகார் மனுவில் பல்வேறு தலைப்புகளின் கீழ் சா.கொடிக்குளம் பேரூராட்சியில் நிகழ்ந்துள்ள குற்றச்சாட்டுகள் குறித்து தனித்தனியே புகார்கள் அளிக்கப்பட்டுள்ளன. முதலாவதாக குடிநீர் இணைப்பிற்கு சென்டேஜ் கட்டணம் மற்றும் ரோடு கட்டிங் சார்ஜ் எதுவும் வசூலிக்காமலும், முன்னுரிமை அடிப்படையில் குடிநீர் இணைப்பு வழங்காமல் முறைகேடாக வேண்டிய நபர்களுக்கு முன்னுரிமையில் பணம் பெற்றுக்கொண்டு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். இப்புகார் குறித்து தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட பட்டியலையும், மே 2020ல் பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிந்த நபர் பணியிட மாறுதலில் சென்ற சமயத்தில் பேரூராட்சியில் துப்புரவு மேற்பார்வையாளராக பணிபுரியும் திரு. பா. மகேஷ் என்பவருக்கு சுமார் 500 மீட்டர் சிமெண்ட் ரோட்டை தோண்டி புதிய குடிநீர் குழாய் போடப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். இவருக்கு அளிக்கப்பட்ட குடிநீர் குழாய் இணைப்பு குறித்த விவரம் சா.சொடிக்குளம் பேரூராட்சி செயல் அலுவலரது விளக்க அறிக்கையில் இடம் பெறவில்லை.

➢ குடிநீர் குழாய் இணைப்புகளில் நடைமுறையிலுள்ள விதிமுறைகள் அனைத்தும் பின்பற்றப்படுவதாகவும், மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் ஏதும் குடிநீர் குழாய் இணைப்புகளில் நிகழவில்லை என்றும் செயல் அலுவலரால் மறுக்கப்பட்டுள்ளது. இது குறித்து பேரூராட்சியால் கையாளப்பட்டுவரும் குடிநீர் குழாய் இணைப்புப் பதிவேடு நகல் முறைகேடுகள் ஏதும் நடைபெறவில்லை என்பதற்கான ஆதாரமாகவும் மனுதாரருக்கு அதனை ஊர்ஜிதப்படுத்திட ஏதுவாகவும் இம்முறைமன்ற நடுவத்திற்கு வழங்கப்படவில்லை. மேலும்,

விண்ணப்பித்தவர்கள் அனைவரிடமிருந்தும் முறையாக அறிவிப்பு செய்யப்பட்ட பின்னர், கட்டணங்கள் வசூலிக்கப்பட்டு, அதன் பின்னர் முன்னுரிமை அடிப்படையில் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டதை ஊர்ஜிதப்படுத்தும் வகையில், கட்டணங்கள் யார் யாரால் எப்போது செலுத்தப்பட்டது என்பதை தெளிவுபடுத்தும் விதமாக அதுகுறித்த விவரங்களையும் சா.கொடிக்குளம் பேரூராட்சி செயல் அலுவலர் தமது அறிக்கையுடன் நகலிட்டு வழங்காமல், மனுதாரரது புகார் முற்றிலும் மறுக்கப்படுவதாக தெரிவித்துள்ளதை இம்முறைமன்ற நடுவத்தால் ஏற்க இயலாது.

- பேரூராட்சியில் கணினி இயக்குவராக உள்ள திருமதி. ச. கனகலட்சுமி முறைகேடாக எந்தவொரு ஆவணங்களும் சமர்ப்பிக்காமல் அவரது பெயரில் குடிநீர் இணைப்பைப் பெற்றுள்ளதாக மனுதாரர் தெரிவித்துள்ளதற்கு, செயல் அலுவலர் அன்னாரது தகப்பனார் சடாச்சரம் ஆசாரி இறந்துவிட்டதால், திருமதி. ச. கனகலட்சுமி பெயரில் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார். இதற்கு முறையான ஆவணங்களையும், இறந்த தனது தந்தையின் இறப்பு சான்றிதழ் மற்றும் ஏனைய குடும்ப உறுப்பினர்களது சம்மதமும் அளித்ததன்பேரில், முறையாக அவரது பெயரில் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டதா என்பதை சா.கொடிக்குளம் பேரூராட்சி செயல் அலுவலர் தமது அறிக்கையில் தெளிவுபடுத்தாததால், அவரது அறிக்கை ஒன்றை மட்டுமே குற்றச்சாட்டிற்கான மறுப்பாவணமாக கருத இயலாது.

- குடிநீர் இணைப்பு எண்.350 கொண்ட வீடு சுந்தரமூர்த்தி என்பவரது பெயரில் சொத்து வரி இருந்ததாகவும், மேற்படியாரிடமிருந்து யாதவர் டிரஸ்ட் கிரையம் பெற்றுள்ளதால் அன்னாரின் பெயரில் இணைப்பு வழங்கப்பட்டதென்று தெரிவித்துள்ளார். மனுதாரர் தனது புகார் மனுவில் புதிய வரிவிதிப்பு எண்.3246 யாதவர் டிரஸ்ட் என்ற பெயரில் உள்ள நிலையில், மா. சுந்தரமூர்த்தி என்ற பெயரில் குடிநீர் ரசீது வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். வரிவிதிப்பு பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ள நிலையில், குடிநீர் இணைப்பு யாதவர் டிரஸ்ட் பெயரில் மாற்றப்படாததற்கான காரணம் செயல் அலுவலரால் தெளிவாக்கப்படவில்லை.

- மனுதாரர் பொறியாளர் யாரும் சம்மந்தப்பட்ட இடத்தினை நேரில் ஆய்வு செய்யாமல் துப்புரவு மேற்பார்வையாளர், பதிவுரு எழுத்தர் மற்றும் கணினி இயக்குபவர் ஆகியோர் லஞ்சம் பெற்றுக்கொண்டு, தார் சாலை/சிமெண்ட் சாலை என்ற பாகுபாடு பாராமல் சென்டேஜ் கட்டணம் மற்றும் ரோடு கட்டிங் சார்ஜ் ஆகியவற்றை முறையாக வசூல் செய்யாமல் தோராயமாக வசூல் செய்து குடிநீர் இணைப்பு வழங்கியதில் பேரூராட்சிக்கு பல லட்சம் நிதியிழப்பு ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். சா.கொடிக்குளம் பேரூராட்சியில் செயல் அலுவலர் பணியிடம் காலியாக இருந்த நிலையில் இதுபோன்ற நிகழ்வுகள் நடந்தேறியதா அல்லது மேற்படி நபர்களால் எந்தவொரு காலத்திலும், செயல் அலுவலரின் அனுமதியின்றி எந்தவொரு வீட்டிற்கும் முறைகேடாக குடிநீர் இணைப்பு வழங்கப்படவில்லை என்பதை தமது அறிக்கையில் தெளிவாக்கவில்லை. ஊழியர்கள் யாரும் லஞ்சம் வாங்குவதில்லை

என்பதை மட்டுமே குறிப்பிட்டுள்ளார். மேலும், ரோடு கட்டிங் சார்ஜ் மற்றும் சென்டேஜ் கட்டணங்கள் பாகுபாடின்றி முறையாக விதிகளின்படி வசூலிக்கப்பட்டு வருவதை உரிய ஆதார ஆவணங்களின் மூலம் ஊர்ஜிதப்படுத்தவில்லை.

➢ சொத்துவரி விதிப்பு எண்கள் முறைகேடாக மாற்றம் செய்யப்பட்டது குறித்து சா.கொடிக்குளம் பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள அறிக்கையில் 10 ஆண்டுகளுக்கொருமுறை வரிச்சீராய்வின்படி வரிவிதிப்பு எண்கள் இடம் மாறுமென்றும், ஒவ்வொரு வருடத்திலும் புதிய வரிவிதிப்பு எண்கள் சேரும்போது அந்த வருடத்திற்குரிய வரிவிதிப்பு எண்கள் அந்தந்த வார்டு, தெருவாரியாக இடப்பட்டு மறுவருடத்தில் அந்தந்த வார்டு/தெருவுக்கு கொண்டுசெல்லும்போது வரிவிதிப்பு எண்கள் மாறுமென்றும், அதனை வைத்து முறையீட்டு மனுதாரர் வரிவிதிப்பு எண்கள் பெயர்களை மாற்றியுள்ளதாக தெரிவித்துள்ளார் என்றும், இதில் எந்த முறைகேடுகளும் நிகழவில்லை என்றும் தெரிவித்துள்ளார். மனுதாரரின் இப்புகார் குறித்து செயல் அலுவலரால் தெரிவிக்கப்பட்டுள்ள கூற்று ஏற்கத்தக்கதல்ல. சொத்து வரிவிதிப்பு எண்கள் பத்தாண்டுகளுக்கொருமுறை வரிச்சீராய்வின்படி இடமாறுமென்பதும், ஒவ்வொரு வருடத்திலும் புதிய வரிவிதிப்பு எண்கள் சேரும்போது அந்த வருடத்திற்குரிய வரிவிதிப்பு எண்கள் அந்தந்த வார்டு, தெருவாரியாக இடப்பட்டு மறுவருடத்தில் அந்தந்த வார்டு/தெருவுக்கு கொண்டுசெல்லும்போது வரிவிதிப்பு எண்கள் மாறுமென்றும் செயல் அலுவலரால் தெரிவிக்கப்பட்டுள்ள காரணம் ஏற்புடையதாக இல்லை. மேலும், செயல் அலுவலர் இதற்கான ஆதாரங்கள் எதனையும் தமது அறிக்கையில் குறிப்பிட்டோ, அல்லது அவற்றின் நகல்களை தமது அறிக்கையுடனோ இணைக்கவில்லை. எனவே, மனுதாரரின் இப்புகார் குறித்து உரிய ஆவணங்களை பரிசீலனை செய்து, உண்மை நிலையை கண்டறிவது அவசியமாகிறது. மேலும், இதில் முறைகேடுகள் ஏதும் நிகழ்ந்துள்ளனவா என்பதையும் கண்டறிதலும் அவசியமென இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது.

➢ தனிநபர் கழிப்பிடம் கட்டும் திட்டத்தில் தல ஆய்வு மேற்கொள்ளாமல் போலியான கழிப்பிட புகைப்படத்தை கணினியில் பதிவேற்றம் செய்து முறைகேடு செய்துள்ளதாகவும், பல்வேறு விண்ணப்ப எண்களுக்கு ஒரே புகைப்படம் பதிவேற்றம் செய்துள்ளது குறித்து அனைத்து ஆதாரங்களையும் சமர்ப்பிப்பதாக மனுதாரர் குறிப்பிட்டுள்ளார். இதில் முறைகேடுகள் ஏதும் நிகழவில்லை என்று பொதுவாக சா.கொடிக்குளம் பேரூராட்சி செயல் அலுவலர் தமதறிக்கையில் குறிப்பிட்டுள்ளாரே அன்றி மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்ப எண்களுக்கு தனிநபர் கழிப்பிடம் கட்டப்பட்டதற்கான விவரங்களை பட்டியலிட்டு, பயனாளிகளுக்கு எந்தெந்த தேதியில் எந்தெந்த பயனாளிகளுக்கு பணம் பட்டுவாடா செய்யப்பட்டது என்ற விவரங்களை அளிக்கவில்லை. இதனால் மனுதாரரால் எழுப்பப்பட்டுள்ள புகார்கள் குறித்து மனுதாரர் திருப்தியடைவதற்கு வாய்ப்பில்லாமல், அதே குற்றச்சாட்டினை மீண்டும் மீண்டும் முன்வைப்பதற்கு வாய்ப்பெழக்கூடுமென்பதையும் இம்முறைமன்ற நடுவம் சுட்டிக்காட்ட விழைகிறது.

எனவே, மனுதாரரால் எழுப்பப்பட்டுள்ள புகார்களில் குறிப்பிட்டு எழுப்பப்படும் புகார்களுக்கான மறுப்புரையை உரிய ஆதாரங்களுடன் பேரூராட்சியின் செயல் அலுவலர் தெளிவாக்கவேண்டியது அவசியமாகும் என்பதையும் இம்முறைமன்ற நடுவம் வலியுறுத்துகிறது.

- பிறப்பு இறப்பு சான்றிதழ் வழங்கியதில் முறைகேடுகள் குறித்து மனுதாரரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு சா.கொடிக்குளம் பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள விளக்கம் ஏற்கப்படுகிறது. மேலும், மனுதாரரால் அளிக்கப்பட்டுள்ள இப்புகார் குறித்து அவர் விரும்பினால் எப்பொழுது வேண்டுமானாலும் பேரூராட்சியிலுள்ள பதிவேடுகளை ஆய்வு செய்துகொள்ளலாமென செயல் அலுவலர் உறுதியளித்துள்ளதால், சா.கொடிக்குளம் பேரூராட்சி செயல் அலுவலரது அறிக்கை ஏற்கப்படுகிறது.

- பேரூராட்சியில் பணிபுரியும் பரப்புரையாளர்களிடம் முறைகேடாக முன்னாள் செயல் அலுவலர் திருமதி. இரா. மோகனா மாரியம்மாள் மற்றும் துப்புரவு மேற்பார்வையாளர் பா. மகேஷ் ஆகியோர் முறைகேடாக பணம் பெற்றுக்கொண்டு பரப்புரையாளருக்கு போலியான வருகையை பதிவு செய்துள்ளதாகவும், உதாரணத்திற்கு 30.8.2018 அன்று ஆர். பிரபாராணிக்கு திருமணம் என்றும், அன்றுகூட அவருக்கு விடுப்பு போடாமல் வருகை அளிக்கப்பட்டுள்ளதாகவும், மேலும் அவர் கருவுற்றிருக்கும்போது விடுப்பு போடாமலும், 29.5.2019ல் அவரது சொந்த ஊரான T. கல்லுப்பட்டியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் பெண் குழந்தை பிறந்த நிலையில், மூன்று மாதகாலம் அலுவலக வேலைக்கு வரவில்லை. ஆனால் அவர் வந்ததாக பொய் கையொப்பமிட்டு அவரது சம்பளத்தை செயல் அலுவலர் மற்றும் துப்புரவு மேற்பார்வையாரும் மோசடி செய்துள்ளனர் என்று குறிப்பிட்டுள்ளார். மேலும், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் செயல் அலுவலர் மேற்கண்ட பணியாளருக்கு குழந்தை பிறந்த மாதத்தில் 3 நாட்கள் மட்டுமே பணிக்கு வரவில்லை என்று தகவல் வழங்கியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். இதனை உறுதி செய்துகொள்ளும் வகையில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் செயல் அலுவலரால் வழங்கப்பட்ட 26.6.2020 நாளிட்ட பதிலறிக்கையில் திருமதி. பிரபாராணி என்பவர் மே 2019ல் மூன்று நாட்கள் மட்டுமே விடுப்பு எடுத்துள்ளார் என்று மனுதாரருக்கு அளித்துள்ள பதிலறிக்கையின் நகலினை இப்புகாருக்கான ஆதாரமாக இணைத்துள்ளார். தனியர் ஒருவருக்கு பதிலி பணி செய்துள்ள நிலையில், பணி யாரால் மேற்கொள்ளப்பட்டது என்பதை உறுதி செய்யாதநிலையிலும், ஒப்பந்தத்தின்படி ஒரு நபருக்கு பதிலாக மற்றொரு நபர் பணி செய்வது ஒப்பந்த ஷரத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளதா என்பது தெளிவுபடுத்தப்படவில்லை. மேலும், இது குறித்து முந்தைய செயல் அலுவலர் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், தற்போதைய செயல் அலுவலரின் கூற்றை ஏற்கவோ மறுக்கவோ, உரிய ஆதார ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாத நிலையில், உரிய ஆவணங்களை ஆய்வு செய்து இதில் முறைகேடுகள் நிகழ்ந்துள்ளதா என்பதை கண்டறிந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென

வலியுறுத்துகிறது. மேலும், தனி நபர் ஒருவருக்கு ஒப்பந்ததாரரின் இசைவின்றி, ஒரு பதிலி பணி செய்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளதும் ஏற்கக்கூடியதல்ல.

- கணினி இயக்குபவர் (Computer Operator) பணிக்கு மாவட்ட ஆட்சியரால் ஒப்பளிக்கப்பட்டுள்ள விகிதத்தில் தினக்கூலி வழங்காமல் அதனைவிட பலமடங்கு சம்பளம் அதிகமாய் வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பாக 2010–2011 முதல் 2021–2022 வரையிலான 10 ஆண்டுகளுக்கான கணினி இயக்குதல் பணிக்கான தினக்கூலி நிர்ணய தொகையையும் மனுதாரர் இணைத்துள்ளார். மேலும் விருதுநகர் மாவட்டத்தில் விற்பனை ஆகாத "மக்கள் முகம்" என்ற நாளிதழில் 2020–21ம் ஆண்டுக்கு விளம்பரம் செய்யப்பட்டு, எந்தவித முன்னறிவிப்பும் இன்றி, திருமதி. கனகலட்சுமி என்பவரை ரூ.21,750/–க்கு கணினி இயக்குதல் பணிக்கு, பல ஆயிரம் லஞ்சம் பெற்றுக்கொண்டு, பணியமர்த்தியுள்ளதையும் குறிப்பிட்டுள்ளார். பேரூராட்சியில் சொத்துவரி, தொழில்வரி, குடிநீர் வரி மற்றும் வரியில்லா இனங்கள் கட்டணம் அனைத்தும் வசூலிக்கப்படுவதால், பணிச்சுமை காரணமாக மாவட்ட ஆட்சியர் அனுமதித்த தொகையைவிட கூடுதல் தொகைக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டு, ஊதியம் வழங்கப்பட்டுள்ளதென சா.கொடிக்குளம் பேரூராட்சி செயல் அலுவலர் குறிப்பிட்டுள்ளது ஏற்புடையதல்ல. இது முற்றிலும் தவறான முன்னுதாரணமாக ஏனைய பேரூராட்சிகளிலும் எடுத்துக்கொள்ள வாய்ப்பினை ஏற்படுத்திட வழிகோலும் என்பதால், செயல் அலுவலரின் இவ்விளக்கத்தினை ஏற்க இயலாது என இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. இதுபோன்ற காரணத்தினால், குறைந்த ஒப்பந்தம் அளித்த ஏனைய பிறர் முறைகேடுகள் நடந்துள்ளதாக கருதுவதை மறுத்திடவும் இயலாது. மாவட்ட ஆட்சியரால் நிர்ணயிக்கப்பட்டுள்ள தினக்கூலி நிர்ணயத் தொகையைவிட கூடுதலாக அதாவது ரூ.21,750/–க்கு திருமதி. கனகலட்சுமி என்பவரை கணினி இயக்குநர் பணிக்கு நியமனம் செய்துள்ளதால் இதில் விதிமீறல்கள் நிகழ்ந்துள்ளதாகவே கருதவேண்டியுள்ளது. மேலும், ஒப்பந்தம் கோரப்படும் போது அந்தந்த மாவட்டங்களில் அதிக எண்ணிக்கையில் விற்பனையாகும் நாளிதழில் ஒப்பந்த அறிவிப்புகள் பிரசுரிக்கப்படவேண்டும். மாவட்ட ஆட்சியரால் அனுமதிக்கப்பட்ட தினக்கூலி நிர்ணயத் தொகை 2010–2011ல் ரூ.156/– ஆகவும், 2020–2021ம் ஆண்டுக்கு ரூ.581/– ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில், நிர்ணயிக்கப்பட்டுள்ள தொகையைவிட கூடுதலான தொகைக்கு தனியரை நியமித்துள்ளதற்கு எடுத்துரைக்கப்பட்டுள்ள காரணங்கள் ஏற்புடையதல்ல என்றே இம்முறைமன்ற நடுவம் சுட்டிக்காட்ட விழைகிறது. இதனால் ஏற்பட்டுள்ள நிதியிழப்பிற்கு சம்மந்தப்பட்ட செயல் அலுவலரே பொறுப்பாவார்.

- பரப்புரையாளர் திருமதி. பிரபாராணி திருமண நாளன்று அவரது உறவினரை தனது பணியை மேற்கொள்ள அனுமதித்து மேற்கொள்ளப்பட்டதால் 30.8.2018 அன்று அவருக்கு விடுப்பு பதிவு செய்யப்படவில்லை என்றும், திருமணத்திற்கு பின்பு இவர் கூமாப்பட்டியில் வாடகை வீடு பார்த்து தங்கியிருந்து அவரது உறவினர் மூலம் பணிகளை செய்து வந்ததால், அவருக்கான வருகை பதிவு செய்யப்பட்டதாக செயல் அலுவலர் குறிப்பிட்டுள்ளார். மேலும், பரப்புரையாளருக்கான ஊதியம்

பேரூராட்சியிலிருந்து வழங்கப்படுவதில்லை என்றும், மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி மேற்கொண்ட நிறுவனம்தான் பேரூராட்சியிடம் வருகை விவரத்தை பெற்றுக்கொண்டு ஊதியமளிப்பதாக குறிப்பிட்டுள்ளார். தனி நபர் ஒருவருக்காக அதுவும் ஒப்பந்த நிறுவனம் சம்பளம் வழங்கிவரும் நிலையில், தனியரின் திருமண நாள், மற்றும் மகப்பேறு காலங்களில் அவரது வருகையை பேரூராட்சி நிர்வாகம் பிரிதொரு நபர் அவ்வேலையை மேற்கொண்டதன் அடிப்படையில், அவருக்கு வருகை அளித்துள்ளதாக குறிப்பிடுவது ஏற்புடையதல்ல. அவ்வாறு பதிலி ஆள் நியமிக்கப்படும் நிலையில், பரப்புரையாளரே தனது கைப்பட கடிதம் அளித்திருந்தால் அதனை முன்கூட்டியே செயல் அலுவலர் ஒப்பந்த நிறுவனம் மூலமாக அக்கடிதத்தினை பெற்று, பதிலியை அனுமதித்திருந்தால், அது அனுமதிக்கத்தக்கது. ஆனால், இந்நேர்வில் செயல் அலுவலரின் தற்போதைய மறுப்புரையை ஏற்பதாக கருதினாலும், மனுதாரரது நிலையில் அவரது சந்தேகத்திற்கு வலுசேர்த்திட வாய்ப்பினை சேர்க்கக்கூடியதாகவே அமையும். முறையான ஆவணமின்றி பதிலி ஆள் பணி மேற்கொண்டதாகக் கூறி தனியர் ஒருவரது வருகையை பேரூராட்சி நிர்வாகம் உறுதி செய்துள்ளதால், இதில் முறைகேடு நிகழ்ந்துள்ளதாக மனுதாரரால் புகார் அளிக்கப்பட்டுள்ளதால், செயல் அலுவலரது அறிக்கையினை ஏற்க இயலாது. மேலும், இதுபோன்ற நடவடிக்கைகளை பேரூராட்சி நிர்வாகம் தவிர்த்திட வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறது.

- அலுவலக உதவியாளர் பணியிடம் நிரப்பப்பட்டதில் **24.10.2019** தேதிய நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டு, **6.12.2019** அன்று நடைபெற்ற நேர்காணலில் பங்கேற்ற எந்தவொரு நபரையும் பணிநியமனம் செய்யாமல், அதன் பின்னர் மறுபடியும் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யாமலும், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து பட்டியலை பெறாமலும் ரகசியமாக திரு. S. சுரேஷ்குமார் என்பவரை பணியமர்த்தியுள்ளதாகவும், வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து பரிந்துரைக்கப்பட்ட நபர்களின் பட்டியலையும் மனுதாரர் இணைத்துள்ளார். இப்பட்டியலில் இடம்பெற்றுள்ள ஐந்து நபர்களுமே பட்டியலினத்தவர்கள் என்பதும், அதில் ஒருவர் மாற்றுத்திறனாளி என்பதும் அறியப்படுகிறது. இதில் இன சுழற்சி கடைபிடிக்கப்படவில்லை என்று மனுதாரரால் குற்றம் சாட்டப்பட்டுள்ள நிலையில், திரு. சுரேஷ்குமார் மட்டும் தகுதியானவர் என தெரிவு செய்யப்பட்டு, அதற்கு நியமன குழுவின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளதாகவும், அனைத்து விதிமுறைகளும் முறையாக கடைபிடிக்கப்பட்டுள்ளதாகவும் செயல் அலுவலரால் தெரிவிக்கப்பட்டு, புகார் மறுக்கப்பட்டுள்ளது. பணிநியமனம் முறையாகவும், இனச்சுழற்சி கடைபிடிக்கப்பட்டும் எவ்வித விதிமீறல்களுக்குமிடமின்றி முறையாக பின்பற்றப்பட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதை பேரூராட்சி ஆவணங்களை ஆய்வு செய்து இதில் முறைகேடுகள் ஏதும் நிகழவில்லை என்பதை உறுதி செய்திட வேண்டுமென்று இம்முறைமன்ற நடுவம் வலியுறுத்துகிறது.

- பேரூராட்சியில் வவுச்சர்கள் மூலம் அபரிமிதமான செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் இது குறித்து **2019–2020**ஆம் ஆண்டில்

மோட்டார் பழுது நீக்கம், குடிநீர் குழாய் பழுது, தெருவிளக்கு பராமரிப்பு, குடிநீர் சப்ளை, ஜே.சி.பி, மரம் வளர்ப்பு மற்றும் மழைநீர் சேகரிப்பு ஆகிய தலைப்புகளின்கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள எண்ணற்ற செலவின பட்டியல்களையும் மனுதாரர் அளித்துள்ளார். இது குறித்து சா.கொடிக்குளம் பேரூராட்சி செயல் அலுவலர் அறித்துள்ள அறிக்கையில், செலவினங்கள் அனைத்தும் விதிமுறைகளுக்குள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், செலவினங்களுக்கு பேரூராட்சியின் தனி அலுவலரது அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதாகவும், இதில் பேரூராட்சிக்கு நிதி இழப்பு ஏதுமில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுதாரரின் பட்டியலின்படி 7/2019ல் மோட்டார் பழுது வகையில் மட்டும் ரூ.1,37,300/- செலவிடப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது. அதுவும் வார்டு எண்.15ல் மட்டுமே அம்மாதத்தில் எட்டு முறை மோட்டார் பழுது மேற்கொள்ளப்பட்டுள்ளதும் தெரியவருகிறது. மனுதாரரின் கூற்றுப்படி எல்லா பழுதுநீக்கச் செலவினங்களும் ரூ.10,000/–க்கு கீழும், ரூ.8000/– ஆயிரம் முதல் ரூ.9,600/– வரையிலும் உள்ளதும் மிகைச் செலவினங்களாகவே உள்ளன. எனவே, பேரூராட்சி நிர்வாகங்களில் வவுச்சர்கள் மூலம் அபரிமிதமான செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவது தெளிவாகிறது. இவ்வாறான செலவினங்களில் பேரூராட்சி ஆணையரின் அறிவுறுத்தங்கள் அனைத்தும் தவறாமல் கடைபிடிக்கப்பட்டுள்ளதை உறுதிசெய்திடவும், இச்செலவினங்கள் அனைத்தும் உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறையினரால் ஆய்வு செய்யப்பட்டு, முறைகேடுகள் ஏதும் நிகழவில்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளதா என்ற விவரம் தெளிவாக்கப்படவில்லை என்பதால், வவுச்சர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள செலவினங்களில் உரிய கண்காணிப்பும், ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட வேண்டியது மிகவும் அவசியமென இம்முறைமன்ற நடுவம் வலியுறுத்த விழைகிறது.

- துப்புரவு பணியாளராக பணியில் 7.9.2007ல் நியமனம் செய்ப்பட்டுள்ள திரு. பா. மகேஷ் நியமிக்கப்பட்டு, அதன் பின் 2011ல் துப்புரவு மேற்பார்வையாளராக பதவி உயர்வும், அவருக்கு முன் பணியில் சேர்ந்த நபர்களை முன்னுரிமைப் பட்டியலில் இருந்தும், முறைகேடாக வழங்கப்பட்டுள்ளதாக மனுதாரர் குறிப்பிட்டுள்ளார். மேலும் இவர் வருமானத்திற்கு அதிகமாக முறைகேடாக ரூ.50 லட்சத்திற்கு மேல் வீடு கட்டியுள்ளார் என்றும், அதற்கு ஆதாரமாக அவரது வீட்டின் புகைப்பட நகலினையும் மனுதாரர் இணைத்துள்ளார். சுகாதார பணியாளர் திரு. பா. மகேஷ் மட்டுமே சுகாதார மேற்பார்வையாளர் பதவிக்கு தகுதி உடையவரென கண்டறியப்பட்டு, பணியமர்த்தப்பட்டதாக செயல் அலுவலர் குறிப்பிட்டுள்ளார். எனினும், திரு. பா. மகேஷ் துப்புரவு மேற்பார்வையாளராக பணியமர்த்தப்பட்டது தொடர்பான ஆவணங்கள் ஏதும் செயல் அலுவலரால் சமர்ப்பிக்கப்படாத நிலையில், இப்புகார் குறித்த ஆவணங்களை ஆய்வு செய்து, விதிமீறல்கள் நிகழ்ந்திருப்பின் அதற்குக் காரணமான சம்மந்தப்பட்ட பேரூராட்சி செயல் அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும், துப்ப்ரவு மேற்பார்வையாளர் தனது வருமானத்திற்கு அதிகமாக ரூ.50 லட்சத்திற்கு வீடு கட்டியுள்ளது குறித்து எந்தவிதமான விளக்கமோ உரிய அனுமதியின்பேரில் அவரால் கட்டப்பட்டதா என்ற

விவரங்களையோ செயல் அலுவலர் தெளிவுபட தமது அறிக்கையில் குறிப்பிடவில்லை.

7. மேற்குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலையில், சா.கொடிக்குளம் பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள விவர அறிக்கையில் மனுதாரரின் புகார்கள் அனைத்தும் மறுக்கப்பட்டும், பேரூராட்சியால் அனைத்து விதிமுறைகளும் முறையாக கடைபிடிக்கப்பட்டு, முறைகேடுகள் ஏதும் நடைபெறவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் மனுதாரரால் முன்வைக்கப்பட்டுள்ள பல்வேறு புகார்கள் ஒவ்வொன்றிற்கும் உரிய ஆதார ஆவணங்கள் முன்வைக்கப்பட்டுள்ளதால், சா.கொடிக்குளம் பேரூராட்சி செயல் அலுவலரது அறிக்கையினை மட்டுமே ஏற்று மனுதாரரின் குற்றச்சாட்டுகளை நிராகரித்திட இயலாது என இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. மேலும், மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையினரால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் தணிக்கைத் தடை ஏதும் எழுப்பப்படவில்லை என்பது செயல் அலுவலரது அறிக்கையில் இடம்பெறவில்லை. அதுமட்டுமல்லாமல், தனிநபர் கழிப்பிடம், பணி நியமனங்கள் போன்றவற்றிற்கு தொடர்புடைய ஆவணங்கள் ஏதும் இம்முறைமன்ற நடுவத்தில் பார்வைக்காக முன்வைக்கப்படாததால், மனுதாரரின் புகார்கள் குறித்து பேரூராட்சிகளின் ஆணையாளர்/இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையினால் ஆய்வு மேற்கொண்டு, அதன் அடிப்படையில் உரிய தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், மனுதாரரால் முன்வைக்கப்பட்டுள்ள புகார்களில் முறைகேடுகள் நிகழ்ந்திருப்பது ஊர்ஜிதமாயின், சம்மந்தப்பட்ட பேரூராட்சி செயல் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், இதுபோன்ற முறைகேடுகள் இனிவரும் காலங்களில் நிகழாமல் தடுத்திட உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அனைத்து பேருராட்சி மண்டல உதவி இயக்குநர்கள்/செயல் அலுவலர்களுக்கு வழக்குமாறும் பேரூராட்சிகளின் ஆணையாளருக்கு அறிவுறுத்தப்படுகிறது. மேலும் சா.கொடிக்குளம் பேரூராட்சியில் சுகாதார மேற்பார்வையாளராக பணியாற்றிவரும் திரு. பா. மகேஷ் என்பவரது பணிநியமனம் மற்றும் மோசடி செய்து வருமானத்திற்கு அதிகமாக ரூ.50 லட்சத்தில் அவர் வீடு கட்டியுள்ளதாக குறிப்பிட்டுள்ள புகார் குறித்து உரிய விசாரணை மேற்கொண்டு உரிய ஆவணங்களின் அடிப்படையில் இப்புகார் மீது நடவடிக்கையை தொடருமாறும் இது குறித்தான நடவடிக்கையை பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் நிலையில் ஒருவரை நியமித்து தனியரிடம் விசாரணை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்படுகிறது.

The petitioner has submitted voluminous record of copies of bills, vouchers and account statements besides photographic copies of IHL papers, malpractices in issue of Birth and Death Certificates in the Town Panchayat and alleged unethical practices in appointments, issue of water supply connections etc. The list is exhaustive and detailed. Hence, it is appropriate that the Director of Local Fund Audit is directed to get the transactions, Tenders issued, bills, vouchers and account statements examined and verified thoroughly with reference to the rules and regulations of expenditure discipline and report the anomalies and violations if any, to the Commissioner of Town Panchayats for

necessary disciplinary action against the Town Panchayat officials involved in the petition within a period of three months.

The Commissioner of Town Panchayats is directed to set up a Committee of his office to verify whether appointments have been made in adherence to instructions, rule of reservation and procedural protocol. This shall include alleged abuse of procedure in issuing drinking water supply connections, property tax notices, attendance manipulations and the other deviations reported by the petitioner.

The enquiry should be completed within 3 months after which, disciplinary action should be launched against the delinquents if irregularities and violations are reported by the Director of Local Fund Audit and the Committee to be appointed by the Commissioner of Town Panchayats

**2022ஆம் ஆண்டு, மார்ச் திங்கள் 28–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.**

(ஒம்)/– x x x x x
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்
திரு. S. கார்த்திகேயன்,
42, பிள்ளைமார் தென்வடல் தெரு, சேத்தூர் மற்றும் அஞ்சல்,
இராஜபாளையம் வட்டம், விருதுநகர் மாவட்டம்–626121
செயல் அலுவலர்,
சா.கொடிக்குளம் பேரூராட்சி, சா.கொடிக்குளம், விருதுநகர்–626 133
மாவட்ட ஆட்சித் தலைவர், விருதுநகர் மாவட்டம், விருதுநகர்.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை,
ஒருங்கிணைந்த நிதித்துறை வளாக கட்டிடம், 4–வது தளம், நந்தனம், சென்னை–35
பேரூராட்சிகளின் மண்டல உதவி இயக்குநர், மதுரை மண்டலம், மதுரை

பேரூராட்சிகளின் ஆணையாளர், பேரூராட்சிகளின் ஆணையரகம்,
நகர் நிர்வாக அலுவலகம், ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி நகர், சென்னை–28

இணை இயக்குநர் (பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம், நகர் நிர்வாக அலுவலகம்,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028. (பெயரிடப்பட்ட உறையில்)
நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

–/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/–

மு. பழனிவேல்
செயலருக்காக
31.3.2022